Crl.Misc/ 39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 50 /2022**

Preliminary Register

Deposition of **DW- 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் | Father Name | : | கோதண்டராமன் |
| Village | : | கீழ அமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | பட்டதாரி ஆசிரியர்- நீடாமங்களம் மேல் நிலைப்பள்ளி |
| Religion | : | | Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day of November 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. புகார்தாரர் ஆஜர் இல்லை. பிரிவு 279 BNSS ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்டுகிறது . புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.6 எனது வழக்கறிஞர் மூலம் புகார் தாரர் வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு. பு.சா.ஆ.6ல் இறுதி பத்தியின் 6 வது வரியில் எதிர்வரும் 3 மாதத்திற்குள் எனது கட்சிக்காரர் 100க்கு 1 வட்டி வீதம் மேற்கண்ட பாக்கி தொகைக்கு அசலும் வட்டியுமாக கொடுத்து கணக்கை முடிக்க தயாராக உள்ளார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட தொகையினை இதுநாள் வரை புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சட்டமுறைப்படி புகார்தாரரிடமிருந்து பெற்றுக்கொண்ட

கடன்தொகையை கொடுக்காமல் ஏமாற்றி இவ்வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் கூறி மேற்படி பு.சா.ஆ.6ல் பொய்தகவல் கூறி பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடனாக பெற்ற தொகையை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் சட்டத்திற்கு புறம்பாக என்னிடமிருந்து எவ்வித வட்டியையும் வசூல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் என்னிடமிருந்து அதிக வட்டி வசூல் செய்தார் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள ஹானஸ்ட்ராஜ் என்பவர்க்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.24 16:18:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.